# 24. நட்புக்குகந்தநாயகம்.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**சொ**ல்லும் பொருளு மெனவிரண்டு தொகை ப்ப வஞ்சம் பற்றியுடம்
பெல்லை யுடைய வுயிரின்க ணெழும்பு மேக தேசவுணர்
வல்லன் மருவு பாசவுணர் வாகு மிதுவோ முத்திதரும்
நல்ல வுணர்வை யீதியெங்க ணட்புக் குகந்த நாயகமே. 1

**இ**ரண்டு பிரபஞ் சமுநீக்கி யேற்ற நானென் றெழுசெருக்கால்
அரந்தை யிகந்த வனாதிமுத்த னாகும் பிரம மாவனெனாத்
திரங்கொ ளுயிர்தான் மதிக்கவருஞ் சிவசம வாதப் பசுஞான
நரன்சேர் மோக்க மடைவதுண்டோ நட்புக் குகந்த நாயகமே. 2

**ஆ**சி றற்பி ரகாசமுமா யரிய பரப்பி ரகாசமுமாய்ப்
பேசு மெந்தப் பொருளினையும் பிறங்க வினிது விளக்கிடுமுன்
ஏசில் வண்மைப் பதிஞான மென்ப தொன்றே முத்திதரும்
நாச மிலதைக் கொடாயெங்க ணட்புக் குகந்த நாயகமே. 3

---

1. **எழும்பல்** - எழல் ; ஒரு பொருளுடைத் தொழிற்பெயராகிய இவ்விரண்டனுள் எழலென்பதிற் பகுதி எழுவெனவும், எழும்பலென்பதிற் பகுதி எழும்பு எனவுங் கொளக் கிடத்தலின் எழலென்பதற்கு எழும்பல் வேறு முடிபி லுளதென்க.

2. **ஏற்றம்** = அதிகம். திரம் - (𑌸𑍍𑌥𑌿𑌰𑌃) ஸ்திரம் என்னும் வடசொல்லின் விகாரம்.

3. "உன் ஏசில் வண்மைப் பதிஞானம்" என்றமையின், பதி யனுக்கிரகிக்கு ஞானமே பதிஞானம், அஃதித் திருப்பாட்டிற் கூறியவா றுளதென்க.

**பூ**த வெளிக்கும் வெளியாகப் புகலு மூலப் பகுதிவெளிக்
கேது வாய கலைவெளிக்க ணிருந்து மதிற்றோ யாததன்மேல்
ஓது முபய மாயைகளி னொளிக்கப் பான்மின் னிறைவவெனை
நாத நிலைமே லேற்றலெந்நா ணட்புக் குகந்த நாயகமே. 4

**க**லையி னொளிக்கு மேலெனவே கழறு மசுத்த மாயையொளி
நிலையை நிகழ்வித் தையினொளியை நீத்த மேல்விந் துவினொளியில்
தலையா யிருந்தைந் தொழிலயருந் தலைவ வுனதோர் சுத்தநிலை
நலம தெளியேற் குறுவதெந்நா ணட்புக் குகந்த நாயகமே. 5

**தா**வி லருணந் திச்சிவனூல் சாற்று மாறெவ் வணமாகப்
பாவிக் கினுமவ் வணமருளும் பரிவுத் தேநீ யாதலினான்
மேவிக் கலவச் சூழ்வண்ணம் விரைவி லருள்செய் தாண்டுகொளாய்
நாவிற் பெரியா ரேத்துமெங்க ணட்புக் குகந்த நாயகமே. 6

**எ**ண்ண மறியாத் தெய்வமொன்றை யாவ னொருவன் பரசிடினஃ
தெண்ணி யருள்வ தின்றநனே யிரங்கி நீயே யறிந்தருள்வை
கண்ணு மெனையுங் கருத்தடைத்துக் காவா காவா கனகமன்றை
நண்ணு மடியா ரிறைவவெங்க ணட்புக் குகந்த நாயகமே. 7

**த**ந்தை தாயர் பசுப்பார்ப்பார் சமய குருவென் பவைகளையுட்
சிந்தை பொருந்த வணங்கிலவை தெரிந்தப் பலனைக் கொடாவஙனம்
அந்த மகன்ற வுனதருளே யளிக்கு மந்தப் பேரருளென்
நந்த லறுக்க வராதுகொலோ நட்புக் குகந்த நாயகமே. 8

**க**ள்ளற் களித்த வன்னபலன் கனசி வயோகிக் களித்தபலற்
கெள்ளத் தனையு மொவாதந்நே ரேனைக் கடவுள் பூசனைநல்
உள்ளக் கடவு ளாயியங்கு முனது பூசைக் கொவாதுண்மை
நள்ளிப் பொருளே யருளெங்க ணட்புக் குகந்த நாயகமே. 9

---

7. **கனகமன்று** = இதயாம்பரம்; தகராலயரகசியங் காண்க.

9. **நளி** – நள்ளியென எதுகை நோக்கி விரித்தல்விகாரம்; **நளி** = பெருமை; **பி – நிகண்டு.**

**எ**ன்ன துடலா ராவிபொரு ளென்னு மொருமூன் றேற்றுரிய
நின்னல் லடியார் பணியருணன் னிலைவீ டென்னு மூன்றனையுந்
தன்ன மறவே தமியேற்குத் தருவா யருண கிரிப்பெரியான்
நன்னர்ப் பதியே குகதேவே நட்புக் குகந்த நாயகமே.